**நம்பகமான மின்சார வழங்கல் முன்னேற்ற ஆதாரச் செயற்திட்டம் - 2019**

---

நம்பகமான மின்சார வழங்கல் முன்னேற்ற ஆதாரவுச் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 9186 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சாவிருந்த தற்போதைய நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. வட மாகாணம் யாழ்ப்பாணத்தில் 3 தீவுகளில் (நயினாதீவு, அனலைதீவு மற்றும் நெடுந்தீவு) சிறிய தனித் தீவு மற்றும் கிராமிய சமூகங்களின் மின்சார பயன்பாட்டிற்கான மின்சக்தி உற்பத்திக்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். வெளிவாரியாக நிதியளிப்பதற்கு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 288 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2 மில்லியனானதுடன் முழுத் தொகையும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிர்வகிக்கப்படுகின்ற வறுமைக் குறைப்பிற்கான ஜப்பான் நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயத்தில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக ரூபா 180.72 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.26 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட அதேநேரம், இலங்கை நிலைபேறான சக்தி அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக ரூபா 106.56 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.75 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் அமுலாக்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் மீது செய்யப்பட்ட அவதானிப்புகளைக் கொண்டுள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 மார்ச் 19 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

என்னுடைய அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்துவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை

உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இல. 6 இலிருந்து அறவிடப்பட்ட ரூபா 12.90 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 12.09 | நடைபெறும் வேலைகள் குறைத்துக் காட்டப்படுவதுடன் தொழிலாரம்பிப்பு முற்பணம் அதிகரித்துக் காட்டப்படல். | செயற்திட்டமானது 2018 திசெம்பரில் நயினாதீவு நீர் வழங்கல் முறைமையை முன்னேற்றுதல் உள்ளடங்கலாக இரண்டு 75 கனமீற்றர்/நாள் கடல் நீர் சுத்திகரிப்பு பொறி வழங்கி பொருத்துதல் மற்றும் சம்பந்தப்பட்ட சிவில் வேலைகளை வரையறுத்த யுனைட்டெட் உழவு இயந்திர மற்றும் உபகரண (தனியார்) நிறுவனத்திற்காக தொழிலாரம்பிப்பு முற்பணமாக இ.ரூபா 14,928,863.23 ஆன தொகை செலுத்தியிருந்தது. இதில் செயற்திட்டமானது 2020 பெப்ரவரியில் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இல. 06 இலிருந்து இ.ரூபா 12,090,149.41 தொகை அறவிடப்பட்டதுடன் மிகுதி 2020 ஏப்ரலில் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இல. 07 இலிருந்து இ.ரூபா 2,838,713.82 அறவிடப்பட்டது. அந்த அறவீட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் 2020 திசெம்பர் 31 | அறவீடு செய்யும் நேரத்தில் அறவீட்டினை கணக்கிற்கு எடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படும். | |
| (ஆ) | ரூபா 1.9 மில்லியன் தொகையான வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் நிதி மூலங்களின் கீழ் தனியான விடயமாக காட்டுவதற்கு பதிலாக தவறுதலாக நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 1.9 | வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் குறைத்துக் காட்டப்படுவதுடன் நடைமுறை பொறுப்புக்கள் அதிகரித்துக் காட்டப்படல். | செயற்திட்டத்தின் நாளாந்த செயற்பாட்டு ரீதியான நிதிக் கொடுக்கல் வாங்கல்களிற்கு டொலர் கணக்கு திறக்கப்பட்டது. 2019 திசெம்பர் 31 இல் ஆண்டு இறுதியிலுள்ளவாறான மீதிகள் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 இன் ஆண்டு இறுதி மீதிகள் மாதாந்த டொலர் மீள்மதிப்பு இலாபம் மற்றும் நட்டத்தை கொண்டுள்ளது. இதன்விளைவால், டொலர் கணக்கினுடைய ஆண்டு இறுதி தேறிய மீள்மதிப்பு இலாபம் மற்றும் நட்டம் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் நிதிக் கூற்றுக்களில் நிதி மூலங்களின் கீழ் தனியாக விடயமாக காட்டப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 112.28 மில்லியன் தொகையான சிவில் வேலை, ஆலோசனை சேவைகள் மற்றும் செயற்திட்ட நிர்வாக செலவினங்கள் என்பவற்றின் பெறுமதி நடைபெறும் வேலைகளில் காட்டுவதற்கு பதிலாக தவறாக நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 112.28 | நடைபெறும் வேலைகள் குறைத்துக் காட்டப்படுவதுடன் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அதிகரித்துக் காட்டல். | ஆசிய அபிவிருத்தி வங்கி மானிய உடன்படிக்கை JFPR-9186-SRI மற்றும் செயற்திட்ட நிர்வாக கைநூல் (PAM) என்பவற்றின் பிரகாரம், செயற்திட்டத்தினுடைய நடைமுறையல்லாச் சொத்துக்கள் சிவில் வெலைகள், ஆலோசனை சேவைகள், உபகரணங்கள் மற்றும் செயற்திட்ட நிர்வாகம் | நிதிக்கூற்றுக்களில் நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | என்பவற்றிற்குள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. 2019 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்தினுடைய மூலதனச் செலவினம் இதன்படி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவால், அந்த நடைமுறையல்லாச் செலவினங்கள் இன்னமும் மூலதனமாக்குதல் செயற்பாட்டில் உள்ளன. செயற்திட்டம்/ தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மூலதனமாக்கப்பட்ட பின்னர் உரிய நிதிக்கூற்றுக்களில் மூலதன செலவினங்களாக காட்டப்படும். | |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலைகளின் பெறுமதிக்கும் நேரொத்த தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்ப சபையின் நிதிக்கூற்றுககளில் காட்டப்பட்ட பெறுமதிக்கும் இடையில் ரூபா 78.48 மில்லியன் தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 78.48 | செயற்திட்ட கணக்குகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலையில் வித்தியாசம் உள்ளன. | செயற்திட்டமானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிக்கூற்றுக்களுடன் செயற்திட்டத்தினுடைய நடைபெறும் வேலைகளின் பெறுமதியை சமப்படுத்தவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீதிகளை இணக்கம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 பௌதீக முன்னெற்றம்**

| | செயற்றிட்ட கூறுகள் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலக்க (%) | அடைதல் (%) | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | சிவில் வெலைகளுடன் தொடர்புபட்ட இரண்டு 75 கனமீற்றர்/நாள் கடல் நீர் சுத்திகரிப்பு பொறி வழங்கி பொருத்துதல் மற்றும் குளிரூட்டல் முறைமை போன்ற 02 கூறுகளை கொண்டுள்ளது. | 100 | 63 | ஒப்பந்த காலப்பகுதியை நீடிக்கும் சாத்தியம் | பொறி பொருத்துதல் பூர்த்தியாக்கப் பட்டுள்ளது. முறைமைய பொற்பேற்றுக் கொள்வதற்காக ஒப்பந்தகாரரால் பொறியின் செயற்பாட்டை செயற்படுத்த வேண்டியுள்ளது. | பொறியின் செயற்படுத்தலிற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2 தொன் ஐஸ் கட்டி உற்பத்தி செய்தல் மற்றும் உறையவைத்தல் முறைமை வழங்கி பொருத்துதல். | ஒப்பந்தத்தின் கௌிவி கொரல் மற்றும் வழங்குதல் 2019 4 ஆவது காலாண்டு இறுதியில் தொடங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. | - | ஒப்பந்தம் தொடங்குவதில் தாமதம் | கேள்வி ஆவணங்கள் தயாரித்தல் செயற்பாட்டில் உள்ளது. எவ்வாறாயினும், ஐஸ் உற்பத்திப் பொறியின் செயற்பாடு நயினாதீவிற்கு இலங்கை மின்சார சபையினுடைய உயர் மின்சக்தி முறைமையிலிருந்து கிடைக்கக் கூடிய மின்சார வழங்கலில் தங்கியுள்ளது. எனவே, இலங்கை மின்சார சபையின் செயற்திட்டம் பூர்த்தியாக்கப்படும் போது ஐஸ் உற்பத்தி செய்தல் பொறியிற்கான ''கேள்வி கோரல்'' சாத்தியமாக உள்ளது. | செயற்திட்டத்தின் ஐஸ் உற்பத்தி செய்யகின்ற தொழிற்சாலைக்காக மின்சாரம் வழங்கும் நோக்கில் உயர் மின்சாக்தி முறைமை பூர்த்தியாக்கலை நிறைவேற்றுவதற்கு இலங்கை மின்சார சபையுடன் (சீஈபீ) கலங்துரையாடல் செய்யப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

-------------------------------

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டு மொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 63 சதவீதம் மற்றும் 23.86 சதவீதமாக இருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகள் இரண்டு கூறுகளை கொண்டுள்ளது. அவற்றில் ஐஸ் கட்டி உற்பத்தி செய்தல் மற்றும் உறையவைத்தல் முறைமை வழங்கி பொருத்துதலின் கோள் கோரல் மற்றும் வழங்குதல் ஒப்பந்தம் 2019 இன் நான்காவது காலாண்டு இறுதிக்கும் 2020 இன் இரண்டாவது காலாண்டின் ஆரம்பத்திற்கும் இடையில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், கோள்வியாளர்களை அழைத்தல் செயற்பாடு 2020 மே 31 வரையும் அழைக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் தொங்குவதில் தாமதமாகும் சாத்தியம். | ஐஸ் பொறியின் செயற்பாடு நயினாதீவிற்கு இலங்கை மின்சார சபையினுடைய உயர் மின்சக்தி முறைமையிலிருந்து கிடைக்கக் கூடிய மின்சார வழங்கலில் தங்கியுள்ளதுடன் இன்னமும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை மின்சார சபையின் செயற்திட்டம் பூர்த்தியாக்கப்படும் போது ஐஸ் உற்பத்தி செய்தல் பொறியிற்கான ''கேள்வி கோரல்'' சாத்தயமாக உள்ளது. | செயற்திட்டத்தின் ஐஸ் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைக்காக மின்சாரம் வழங்கும் நோக்கில் உயர் மின்சாக்தி முறைமை பூர்த்தியாக்குதலை நிறைவேற்றுவதற்கு இலங்கை மின்சார சபையுடன் (சீஈபீ) கலங்துரையாடல் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நீர்த்தேக்க கிணறுகளின் நிர்மாணத்திற்கான காணிகளின் அனுமதிக்காக கடற்கரை பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து (CCD) எழுத்து மூல அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இது 2020 மே 31 வரையும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், கணக்காய்விற்காக | சட்டரீதியான வேண்டுகைகளுடன் இணங்காமை | கடற்கரை பாதுகாப்பு திணைக்களத்திற்கு 2017-09-22 இல் அனுமதிக்காக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர், கடற்கரை பாதுகாப்பு திணைக்களம் அதனைத் தொடர்ந்துவந்த வாரத்தில் களப் பரிசோதனைக்காக வருகை தந்திருந்தனர். பின்னர் அனுமதி செயற்பாட்டிற்காக 2018-12-28 | சட்டரீதியான வேண்டுகைகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், நிர்மாணத்தின் காணிகளின் அனுமதிக்காக 1981 இன் 57 ஆம் இலக்க கடற்கரை பாதுகாப்பு திணைக்கள (CCD) அதிகாரச்சட்டத்தின் பகுதி III இன் 14(I) ஆம் பிரிவின் பிரகாரம், எழுத்து மூல அனுமதி பெற்றுக் கொள்ளாமல் 2020 மே 31 அளவில் இரண்டு நீர்த்தேக்க கிணறுகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | | இல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. இறுதியாக தேசிய நெறிப்படுத்தல் குழுக் கூட்டம் 2019-10-15 இல் நடைபெற்றது, கடற்கரை பாதுகாப்பு திணைக்களம் (CCD) நிர்மாணம் மற்றும் சிவில் வேலைகளை செயற்படுத்துவதற்கு அனுமதி வழங்கியிருந்ததுடன் இதன்படி வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டது. செயற்திட்ட கண்காணிப்பு குழு எழுத்து மூல அனுமதியை பெறுவதற்கு கடற்கரை பாதுகாப்பு திணைக்கள தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டிருந்தது. இதனுடன் தேசிய நெறிப்படுத்தல் குழுக் கூட்ட அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது. (தொடர்பு இணைப்பு 2) | |

### 3.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 10 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்விற்கு உட்படுத்தியிருக்கவில்லை. | சுற்றறிக்கை வேண்டுகையுடன் இணங்கியிருக்கவில்லை | யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் (JKWSSP) மற்றும் மின்சார வழங்கல் நம்பகமான முன்னேற்ற ஆதாரவுச் செயற்திட்டம் (SESRIP) என்பவற்றின் கணக்காய்விற்காக வருகை தருவதற்கு 2020 மார்ச் மாத்திற்கு முன்னர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு திட்டமிட்டிருந்தது. கோவிட் -19 நோய் | சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கதரணமாக, அமர்களுடைய திட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர்கள் வருகை தர இயலாதிருந்தது. எவ்வாறாயினும், அவர்கள் கணக்காய்வை செய்வதற்கும் இயலக்கூடிய விரைவில் அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் உடன்பட்டு அவர்களுடைய கணக்காய்வு அபிப்பிராயத்தை வெளியிட்டிருந்தனர்.

*M*